




# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 349 11.06.2026 THURSDAY VAIKASI : 28 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 349 11.06.2026 வியாழக்கிழமை வைகாசி : 28 விலை : ரூ.5/–


## 130 அடியில் உலகின் மிகப் பெரிய சிவலிங்கம் நிறுவ திட்டம்

# "வாரணசியில் ரூ.100 கோடியில் பிரம்மாண்ட பூங்கா"

புதுடெல்லி: ஜூன்.11-

உத்தர பிரதேசத்தில் உள்ள புனித நகரங்களில் காசி எனும் வாராணசி மிகவும் பிரசித்தி பெற்றது. பிரதமர் மோடியின் மக்களவை தொகுதியான இங்கு பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



அவற்றில் ஒன்றாக ரூ.100 கோடியில் 20 ஏக்கரில் வாராணசியின் பேலுபூர் பகுதியில் ஆக்சிஜன் பூங்கா உருவாக்கப்படுகிறது. மாநகராட்சி சார்பில் 'சிவ தீம் பார்க்' என்ற பெயரில் இந்தப் பூங்கா அமைகிறது. இந்தப் பூங்காவில் காசி விஸ்வநாதர் கோயில் சிவபெருமான் கருப்பொருளாக இருப்பார். உலகத் தரத்தில் இந்தப் பூங்கா அமைகிறது. அடுத்த 8 முதல் 9 மாதங்களுக்குள் இந்தப் பூங்காவில் பிரம்மாண்ட நடைபாதை, குழந்தைகளுக்கான நவீன ஊஞ்சல்கள், திறந்தவெளி கலைக்கூடம், முதியோர் நூலகம், பிரம்மாண்ட வாகன நிறுத்துமிடம் மற்றும் உணவு அரங்கம் ஆகியவை இடம்பெறும்.

மேலும், காசியைச் சேர்ந்த பத்ம விருது பெற்ற ஆளுமைகள் மற்றும் முக்கியப் பிரமுகர்களின் சாதனைகளும் இங்கு காட்சிப் படுத்தப்படும். இளைஞர்கள் மற்றும் குழந்தைகளை விண்வெளி அறிவியல் மற்றும் வானியல் துறையில் ஈர்க்கும் வகையில், இங்கு ஒரு கோளரங்கம் அமைக்கப்பட உள்ளது. பார்வையாளர்களுக்கு ஆன்மிக அமைதியை அளிக்கும் வகையில் இப்பூங்கா வடிவமைக்கப்படும். இது வழிபாட்டு தலமாக இருப்பதுடன் சுற்றுச்சூழல், அறிவியல் மற்றும் நகர்ப்புறச் சுற்றுலாவுக்கான ஒரு முக்கிய மையமாகவும் அமையும்.

காசியின் தொன்மையான பாரம்பரியம், வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்கள் மற்றும் புராணக் கதைகளை எடுத்துரைக்கும் வகையில், இங்கு ஒரு நவீன டிஜிட்டல் அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது. முக்கியமாக 130 அடி உயரத்தில் உலகில் மிக உயரமான சிவலிங்கம் இங்கு அமைக்கப்படுகிறது. தற்போது, கேரளாவின் செங்கலில் 111 அடி மகாலிங்கம் உள்ளது.

பிஹாரின் கிழக்கு சம்பரானில் கட்டப்பட்டு வரும் விராட் ராமாயணக் கோயிலிலும் ஒரு சிவலிங்கம் அமைகிறது. ஒற்றைக் கல்லால் ஆன இந்த சிவலிங்கம் 33 அடி உயரம் கொண்டது. இதை தமிழ்நாட்டின் மகாபலிபுரத்தில் உள்ள சிற்பிகள் வடித்து சமீபத்தில் பிஹார் அனுப்பியது குறிப்பிடத்தக்கது.

## 7 மாற்றுத்திறனாளிகள் உட்பட டாஸ்மாக் பணியாளர்கள் 200 பேருக்கு பதவி உயர்வு

சென்னை: ஜூன்.11-



தமிழகத்தில் கடந்த 2017ம் ஆண்டு நீதிமன்ற உத்தரவுப்படி தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள மூன்றாயிரம் டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டன.

அந்த கடைகளில் பணியாற்றியவர்களை அனைத்து மாவட்ட மற்றும் மண்டலங்களில் உள்ள நிர்வாக அலுவலகங்களில் பணியமர்த்த முடிவு செய்யப்பட்டது. அதற்காக கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பை குறைத்து சிறப்புத் தேர்வு நடத்தி அதில் தேர்ச்சி பெறுவோருக்கு பணி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மூடப்பட்ட கடை பணியாளர்கள் 500 பேருக்கு இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது. இந்நிலையில் இளைநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு 5 ஆண்டுகளில் பதவி உயர்வு வழங்க வேண்டும்.

அதன்படி, நேற்று 200 இளைநிலை உதவியாளர்களுக்கு உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மேலும், டாஸ்மாக் சில்லறை விற்பனை கடைகளில் பணியாற்றும் மாற்றுத் திறனாளிகள் 7 பேருக்கு இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, புதிய அரசு அமைந்தபிறகு 717 மதுபான கடைகள் மூடப்பட்டுள்ளன. இந்தக் கடைகளில் பணியாற்றியவர்களை, தற்போது உருவாகியுள்ள 200 இளநிலை உதவியாளர்கள் காலிப் பணியிடங்களில் பணியமர்த்த வேண்டும் என டாஸ்மாக் பணியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## மின்வெட்டு பிரச்சினையில் ஒரு சிலரின் தூண்டுதலின் பேரில் சாலைகளில் போராட்டம் நடக்கிறது

### அமைச்சர் நிர்மல் குமார் குற்றச்சாட்டு

சென்னை: ஜூன்.11-



மின்வெட்டு பிரச்சினையில் ஒரு சிலரின் தூண்டுதலின் பேரில் சாலைகளில் போராட்டம் நடத்தப்படுகிறது என்று அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள தனியார் விடுதியில் பசுமை ஆற்றல்மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை சார்பாக நடைபெற்ற 25வது ஆண்டு கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியை மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: கடந்த 15 முதல் 20 ஆண்டுகளாக சில துறைகள் எதிர்பார்த்த அளவிலான முன்னேற்றம் அடையவில்லை.

ஆனால் அடுத்த 30 ஆண்டுகள் இந்த அரசு எதை நோக்கி பயணிக்கப் போகிறது என்பது குறித்து பல திட்டங்களை வைத்திருக்கிறோம். மின் துறையில் முதலீட்டாளர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்புகளை வழங்கிவருகிறோம்.

முதலீட்டாளர்கள் எதிர்பார்க்கும் விஷயங்களை இந்த அரசு செய்து தரும். மின்னுற்பத்தி மட்டும்தான் தனியாருக்கு செல்லும். மற்ற அனைத்து கட்டமைப்புகளும் தமிழக மின் வாரியத்திடம் இருக்கும்.

இரவு எங்கெல்லாம் மின்தடை ஏற்பட்டுள்ளது. எவ்வளவு நேரத்தில் சரி செய்யப்படுகிறது என கேட்டறிந்து வருகிறேன். ஒரு சிலர் வேண்டுமென்றே ஃபியூசை பிடுங்கி மின்வெட்டை ஏற்படுத்துகிறார்கள்.

அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிசிடிவி இருந்ததால் ஒரு சிலர் மட்டும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பெரம்பூரில் 2 தெருவில் தொடர்ச்சியாக மின்வெட்டு ஏற்படுகிறது. வேண்டுமென்றே சிலர் மின்வெட்டை ஏற்படுத்துகிறார்கள்.

ஒரு சிலரின் தூண்டுதலின் பேரில் சாலைகளில் போராட்டம் நடத்தப்படுகிறது. வேண்டுமென்று மின் வெட்டு ஏற்படுத்தும் நபர்களைக் கண்காணித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பொது மக்களும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

உடனடி தீர்வு

சிசிடிவி இல்லாத இடங்களில் பொதுமக்கள் சந்தேகப்படும் நபர்கள் குறித்து தெரிவிக்க வேண்டும். மின்னகம் மூலமாகவும், சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் வரக்கூடிய புகார்களுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது.

மின் துறையில் உள்ள அனைத்து பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகிறார்கள். இரவு கண்காணிப்புப் பணியில் அதிக நபர்கள் உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000


## இயக்குநர் பாரதிராஜா உடலுக்கு அரசு மரியாதை: அஞ்சலிக்கு பின் முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை: ஜூன்.11-





திரைத்துறையில் பாரதிராஜாவின் பங்களிப்பைப் போற்றி, அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது இறுதிப் பயணத்திற்கு அரசு மரியாதை வழங்கப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "தமிழ்த் திரையுலகின் இயக்குநர் இமயம் பாரதிராஜா காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த மன வேதனையும் துயரமும் அடைந்தேன்.

கிராமியப் பின்னணியில் வாழ்வியல் உயிரோட்டத்துடன் பல வெற்றிப் படங்களை உருவாக்கி, தமிழ்த் திரைப்பட உலகில் தனக்கு என தனி முத்திரை பதித்தவர் இயக்குநர் பாரதிராஜா. தனது படைப்புகளுக்காக நாட்டின் உயரிய விருதான பத்ம ஸ்ரீ உள்ளிட்ட பல்வேறு தேசிய, மாநில விருதுகளைப் பெற்றவர். பல தலைமுறைக் கலைஞர்களை உருவாக்கிய அவரது பங்களிப்பு தமிழ்த் திரைப்பட வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் மறைவு, தமிழ்த் திரையுலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், திரைப்படத் துறையினருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன். திரைத்துறையில் பாரதிராஜா அவர்களின் பங்களிப்பைப் போற்றி, அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது இறுதிப் பயணத்திற்கு அரசு மரியாதை வழங்கப்படும்." என்று முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

முன்னதாக, நீலாங்கரை இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த இயக்குநர் பாரதி ராஜாவின் உடலுக்கு முதல்வர் விஜய் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

வயது மூப்பு காரணமாக கடந்த சில மாதங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இயக்குநர் பாரதிராஜா இன்று அதிகாலை காலாமானார்.

## போதைப்பொருள் கடத்தல் நபருக்கும் எனக்கும் தொடர்பு இல்லை: லீமா ரோஸ் சகோதரர் ஜான் பிரிட்டோ காவல் ஆணையரகத்தில் புகார்

சென்னை: ஜூன்.11-



போதைப்பொருள் கடத்தல் நபருக்கும், எனக்கும் தொடர்பு இல்லை. சமூக வலைதளங்களில் வீடியோ பதிவிட்டவர்கள், பரப்பியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிமுக எம்எல்ஏ லீமா ரோஸ் மார்ட்டின் சகோதரர் ஜான் பிரிட்டோ சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்தார்.

இலங்கைக்கு கடல் வழியாக ரூ.250 கோடி மதிப்பிலான போதைப்பொருட்களை கடத்தியதாக கூறப்படும் வழக்கில், கோவையை சேர்ந்த ஜான் பிரிட்டோ (57) என்பவரை அமலாக்கத்துறை அண்மையில் கைது செய்தது.

இந்த ஜான்பிரிட்டோ, அதிமுக எம்எல்ஏ லீமா ரோஸ் சகோதரர் எனவும், இவர்களது குடும்பத்தை சேர்ந்தவர் தான் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா என்றும் சமூக வலைதளங்களில் தகவல் வைரலானது.

இந்நிலையில், தனக்கும் போதைப் பொருள் கடத்தல் வழக்குக்கும், எந்த சம்பந்தமும் இல்லாத நிலையில், தன் பெயரை போதைப்பொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்புபடுத்தி சமூக வலைதளங்களில் அவதூறு கருத்துக்களை பதிவிட்டு வருபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று லீமா ரோஸ் சகோதரரான கோயம்புத்தூர், திருவள்ளுவர் நகரை சேர்ந்த ஜான் பிரிட்டோ (59) என்பவர் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்று புகார் மனு அளித்தார்.

அதில், அவர் கூறியிருந்ததாவது: நான் கோவையில் பிளாஸ்டிக் மறு சுழற்சி வியாபாரம் செய்கிறேன். தற்போது சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள எங்கள் அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன்.

எனது சகோதரி லீமா ரோஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது வேண்டுமென்று உள்நோக்கத்தோடு உண்மைக்கு புறம்பாக பல்வேறு அவதூ றான குற்றச்சாட்டுக்கள் திட்டமிட்டு, சுய ஆதாயம் அடைவதற்காக யூடியூபில் தொடர்ந்து பரப்பப்பட்டு வருகிறது. யூடியூபில் பதிவேற்றம் செய்யப்பட்ட வீடியோவை நான் கடந்த 8ம் தேதி பார்த்தேன்.

அந்த வீடியோவில் கூறப்படும் ஜான் பிரிட்டோ எனும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட நபருக்கும், எனக்கும் எந்த ஒரு தொடர்பும் கிடையாது. என்னிடம் மத்திய மாநில அரசுகளை சார்ந்த எந்த ஒரு புலனாய்வு நிறுவனமும், எந்த காலத்திலும் போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக, எந்த ஒரு விசாரணையும் செய்தது கிடையாது.

நான் அவ்வாறான குற்றச் செயல்களில் எந்த ஒரு சூழ்நிலையிலும் ஈடுபட்டதும் கிடையாது. இவ்வாறு இருக்கையில் உண்மைக்கு மாறாக பொய்யாகவும், உள்நோக்கத்தோடும் வீடியோவில் என் மீது புகார் கூறப்பட்டுள்ளன.

இதனால், எனக்கும் மற்றும் என் குடும்பத்தார் நற்பெயருக்கும் மிகப்பெரிய களங்கம் ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணமானவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## தீவனம் சேகரிக்க சென்ற இடத்தில் பெண்ணை கொன்ற சிறுத்தை சுட்டுக்கொலை: உத்தரகாண்டில் பரபரப்பு



கார்வால், ஜூன்.11-
உத்தராகண்ட் மாநிலம் பௌரி கார்வால் மாவட்டத்தில் சிறுத்தை தாக்கியதில் பெண் உயிரிழந்த நிலையில், அந்த சிறுத்தை வனத்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது.
உத்தராகண்ட் மாநிலம் பவுரி கார்வால் மாவட்டத்தில் உள்ள படி கிராமத்தில், நேற்று மதியம் தனது கால்நடைகளுக்கு தீவனம் சேகரிக்க வீட்டின் அருகே உள்ள வயல்வெளிக்குச் சென்ற பிரபா தேவி (55) என்ற பெண் சென்றார். ஆனால் அவர் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. இதனால் அதிர்ச்சியடைந்த அவரது கணவர் தேடிச் சென்றபோது, வயலில் ரத்தக் கறைகளுடன் மனைவியின் உடல் சிதைந்த நிலையில் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து ஊர் மக்களிடம் தெரிவித்தார்.தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வனத்துறை அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் போலீசார் விரைந்து வந்தனர். பெண்ணின் உடலைத் தேடியபோது, சுமார் 200 மீட்டர் தொலைவில் உள்ள பாழடைந்த கட்டிடத்தில் சிறுத்தை பதுங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. தேடுதல் குழுவினர் நெருங்கியபோது புதர்களுக்குள் மறைந்திருந்த சிறுத்தை திடீரென பாய்ந்து வந்து மக்களை தாக்க முயன்றது. இதுகுறித்து கார்வால் கோட்ட வன அதிகாரி மகாதிம் யாதவ் கூறுகையில், 'கூட்டத்தை நோக்கி சிறுத்தை ஆக்ரோஷமாக பாய்ந்ததால், தற்காப்புக்காக வனத்துறை வேட்டை பிரிவு அதிகாரிகள் துப்பாக்கியால் சுட்டதில் சிறுத்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது' என்றார். சிறுத்தையின் உடல் பிரேத பரிசோதனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்

## நிதி ஆயோக், என்டிஏ கூட்டங்கள் புறக்கணிப்பு: டெல்லி செல்லாத புதுவை முதல்வர் ரங்கசாமி



புதுச்சேரி, ஜூன்.11-
நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க முதல்வர் ரங்கசாமி இம்முறையும் டெல்லி செல்லவில்லை என அரசு தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதேபோல் இன்று நடக்கும் என்டிஏ கூட்டணி முதல்வர்கள் கூட்டத்தையும் புறக்கணித்துள்ளார்.
டெல்லியில் பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமைந்து 12 ஆண்டுகள் நிறைவு பெற்றதையும் கொண்டாடும் வகையிலும் பிரதமர் மோடி, இந்தியாவின் நீண்ட காலம் தொடர்ந்து பதவியில் இருக்கும் பிரதமர் என்ற சாதனையை இன்று (ஜூன் 10) படைக்கிறார். இதையொட்டி டெல்லி பாரத் மண்டபத்தில் இன்று என்டிஏ கட்சிகளின் கூட்டம் நடக்கிறது.
இதில் என்டிஏ கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள், மாநில முதல்வர்கள், பிரதமர் மோடி உள்ளிட்ட பாஜக உயர் மட்டத் தலைவர்களும் பங்கேற்கிறார்கள். புதுச்சேரியில் என்டிஏ கூட்டணி 2 வது முறையாக ஆட்சியை அமைத்துள்ளது. ஆனால் தேர்தலில் வென்ற பிறகு முதல்வர் ரங்கசாமி டெல்லி செல்லவில்லை.
இந்நிலையில் என்டிஏ தலைவராக புதுச்சேரியில் உள்ள முதல்வர் ரங்கசாமி இக்கூட்டத்தில் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளார். அத்துடன் பிரதமர் மோடி தலைமையில் நிதி ஆயோக் கூட்டம் நாளை நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் அனைத்து மாநில முதல்வர்கள் பங்கேற்கின்றனர். தமிழக முதல்வர் விஜய் இக்கூட்டத்தில் பங்கேற்க டெல்லிக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார். நிதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர் ரங்கசாமி கடந்த பல ஆண்டுகளாக பங்கேற்பதில்லை. முதல்வர் ரங்கசாமி இக்கூட்டத்தில் பங்கேற்க விமான டிக்கெட் ஏதும் பதிவு செய்யப்படவில்லை. முக்கியமான நிதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர்கள் பங்கேற்க மத்திய அரசு கடிதம் அனுப்பியும் கூட்டத்தில் பங்கேற்க போவதில்லை என்ற முடிவை ரங்கசாமி எடுத்துள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தொடர் போராட்டம், அரசின் அழுத்தத்தால் நர்ஸ்களை அவதூறாக பேசிய மகளிர் ஆணைய தலைவி ராஜினாமா



சண்டிகர், ஜூன்.11-
நர்ஸ்களை அவதூறாகப் பேசிய விவகாரத்தில் அரியானா மாநில மகளிர் ஆணையத் தலைவி ரேணு பாட்டியா தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். அரியானா மாநிலம் குருக்ஷேத்திராவில் உள்ள எல்.என்.ஜே.பி. மருத்துவமனையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஆய்வு நடந்தபோது, அங்கிருந்த நர்சிங் அதிகாரி ஒருவரை மாநில மகளிர் ஆணையத் தலைவி ரேணு பாட்டியா தரக்குறைவாக நடத்தியதாகப் புகார் எழுந்தது. இது தொடர்பாக நர்சிங் ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட புகாரில், 'அவர் எங்களது புனிதமான பணியை இழிவுபடுத்தும் வகையில் பேசியதுடன், பெண் அதிகாரியுடன் மிகவும் மோசமாக நடந்து கொண்டார்' என்று குற்றம் சாட்டப்பட்டது.இந்தச் சம்பவத்தை அடுத்து மாநிலம் முழுவதும் நர்சிங் ஊழியர்கள் ரேணு பாட்டியாவுக்கு எதிராகத் தீவிரப் போராட்டத்தில் குதித்தனர். அவர் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும் அல்லது அவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்தி, பல்வேறு மாவட்டங்களில் மருத்துவமனைகள் முன்பாக நர்ஸ்கள் திரண்டு தர்ணா நடத்தினர். இந்த போராட்டம் தீவிரமடைந்த நிலையில், தான் பேசியதற்கு மன்னிப்பு கேட்க முடியாது என்பதில் ரேணு பாட்டியா பிடிவாதமாக இருந்தார்.
இதுகுறித்து அரியானா பாஜக மாநில சுகாதாரத் துறை அமைச்சர் ஆர்த்தி ராவ் கூறுகையில், 'குருக்ஷேத்திராவில் நடந்த சம்பவம் மிகவும் வெட்கக்கேடானது; இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தலைமை மருத்துவ அதிகாரி ஏற்கனவே பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்' என்று தெரிவித்தார். இந்நிலையில், நர்ஸ்களின் தொடர் போராட்டத்திற்கும் மாநில அரசின் அழுத்தத்திற்கும் பணிந்த ரேணு பாட்டியா, தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இச்சம்பவம் அரியானா அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

## நெய்வேலி மின்விநியோக இணைப்பு டிரான்ஸ்பார்மர் வெடித்ததால் புதுச்சேரி நகரம் இருளில் மூழ்கியது

புதுச்சேரி, ஜூன்.11-
கடலூர் மாவட்டம் நெய்வேலி அனல்மின் நிலையத்தில் இருந்து புதுச்சேரிக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. இந்த மின்சாரம், புதுச்சேரி, வில்லியனூர் தொண்டமாநத்தம் வழியாக உயரழுத்த மின்கம்பிகள் வழியாக மின் துணைநிலையம் வந்து, அங்கிருந்து மரப்பாலம், வெங்கட்டாநகர் உள்ளிட்ட அந்தந்ததுணை மின்நிலையங்கள் மூலம் மின்விநியோகம் பிரித்து விநியோகிக்கப்படுகிறது.
இந்நிலையில் வில்லியனூர் துணை மின்நிலையத்தில் உள்ள ஒரு டிரான்ஸ்பார்மர் நேற்றிரவு 8.45 மணியளவில் திடீரென பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதனால் புதுச்சேரி நகரம், கிராமப்புறம் முழுவதும் மின்விநியோகம் முற்றிலும் தடைபட்டது. இதையடுத்து மின்பழுதை சரிபார்க்கும் பணியில் மின்துறை அதிகாரிகளும், ஊழியர்களும் தீவிரமாக ஈடுபட்டனர். இருப்பினும் ஒருசில லைன்களை மட்டுமே உடனடியாக சரிசெய்து மின்விநியோகம் அளிக்க முடிந்தது. மின்பழுதை முழுமையாக சீராக்கப்படும் வரையில், சுழற்சி முறையில் மின்விநியோகம் மாற்றி விடப்பட்டது.இதனால் உருளையன்பேட்ட, சாரம், உப்பளம், முதலியார்பேட்டை உள்ளிட்ட நகரின் பல்வேறு பகுதிகள் இருளில் மூழ்கியது. இதேபோல் கிராமப்புறங்களும் 2 மணி நேரமாக இருளில் மூழ்கின. அதன்பிறகு படிப்படியான மின்விநியோகம் சீரானது


## ராமேஸ்வரம் தனுஷ்கோடி ரயில் பாதை திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமா தவெக அரசு?



ராமேசுவரம், ஜூன்.11-
ரூ.733 கோடி மதிப்பிலான ராமேஸ்வரம் தனுஷ்கோடி புதிய ரயில் பாதை திட்டத்துக்கு புதிதாக பொறுப்பேற்றுள்ள தவெக அரசு முழு ஒத்துழைப்பு அளித்தால், விரைவில் ரயில் பாதை அமைக்கும் பணிகள் துவங்கும் என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.
ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சென்னை எழும்பூரில் இருந்து தனுஷ்கோடிக்கு 1914 பிப்ரவரி 24ம் தேதி போர்ட் மெயில் ரயில் சேவை துவங்கப்பட்டது. மேலும் தனுஷ்கோடியில் இருந்து இலங்கையிலுள்ள தலைமன்னாருக்கு பயணிகள் கப்பலும் இயக்கப்பட்டது.
இந்த ரயில் சேவையின் பொன்விழா ஆண்டில் 1964 டிசம்பர் 22 அன்று, தனுஷ்கோடியை தாக்கிய புயலில் ரயில்வே நிலையத்திலும், துறைமுகத்திலும் இருந்த ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். தனுஷ்கோடிக்கு வந்து கொண்டிருந்த போர்ட் மெயிலில் பயணம் செய்த 200க்கும் மேற்பட்ட பயணிகளும் உயிரிழந்தனர்.இந்த புயலினால் ராமேஸ்வரம் தனுஷ்கோடி இடையேயான ரயில் பாதை முற்றிலும் அழிந்து போனது. இதனால் தனுஷ்கோடிக்கு பதிலாக ராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து துவங்கப்பட்டது.
தனுஷ்கோடியை புயல் தாக்கி 55 ஆண்டுகள் கழித்து ரயில்வே அமைச்சகம் ராமேஸ்வரத்தில் இருந்து தனுஷ்கோடி வரை 17.20 கிலோ மீட்டர் தொலைவுக்கு புதிய ரயில் பாதை அமைக்க முடிவு செய்து சர்வே பணிகளை மேற்கொண்டது.கன்னியாகுமரியில் 1.3.2019 அன்று நடந்த நிகழ்ச்சியில் காணொலி மூலம் பிரதமர் மோடி ரூ.208 கோடியில் புதிய தனுஷ்கோடி ரயில் பாதை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டினார்.ரூ.208 கோடியில் இருந்து ரூ.733 கோடி:பின்னர், சென்னை ஐஐடியை சார்ந்த பொறியாளர்கள் தனுஷ்கோடிக்கான ரயில் பாதையை ஆய்வு செய்து ரயில் பாதையை புயல், கடல் காற்று மற்றும் மழை வெள்ளத்தில் இருந்து பாதுகாக்க சாலை மட்டத்திலிருந்து ஐந்து மீட்டர் உயரத்துக்கு பரிந்துரைத்தனர்.1964இல் புயல் தாக்கியபோது அப்போதைய ரயில் தண்டவாளங்கள் சாலை மட்டத்தில் இருந்து ஒரு மீட்டருக்கும் குறைவான அளவில் இருந்தது. இதனால் தனுஷ்கோடிக்கான புதிய ரயில்வே பாதைக்கான நிதி தேவை ரூ.208 கோடியில் இருந்து சுமார் ரூ.733 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.இந்நிலையில், கடந்த திமுக ஆட்சியின்போது சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக ராமேஸ்வரம் ஸ்ரீ தனுஷ்கோடி பகுதிகள் உள்ளதால், ராமேஸ்வரம் முதல் தனுஷ்கோடி வரையிலான புதிய ரயில் திட்டத்தை கைவிட வேண்டும் என வலியுறுத்தியதுடன், தனுஷ்கோடியில் இந்த புதிய ரயில் பாதையினால் கடலோர சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்று கூறி ஆர்வம் காட்டவில்லை.
இதனால் பிரதமர் நரேந்திர மோடியால் அடிக்கல் நாட்டப்பட்டு ஏழு ஆண்டுகளுக்கும் மேலாகியும் ராமேஸ்வரம் தனுஷ்கோடி இடையேயான புதிய ரயில் பாதை திட்டம் கிடப்பிலேயே போடப்பட்டுள்ளது.
இது குறித்து ரயில்வே அதிகாரிகள் கூறும்போது, "ராமேஸ்வரம் தனுஷ்கோடி இடையேயான புதிய ரயில் பாதை 17.20 கி.மீ தொலைவுக்கு ஒற்றை வழித்தடத்தில் மின்மயமாக்கப்பட்டு அகல ரயில் பாதையாக அமையும். இதில் ஜடாயு தீர்த்தம், கோதாண்ட ராமர் கோயில், முகுந்தராயர் சத்திரம் ஆகிய புதிய ரயில் நிலையங்களும் அமைக்கப்படும். ராமேஸ்வரம் தனுஷ்கோடி இடையேயான பழைய ரயில் பாதையில் 28.6 ஹெக்டேர் வனத்துறையிடம் உள்ளது. மேலும் 43.81 ஹெக்டேர் மாநில அரசுக்கு சொந்தமான நிலம் மற்றும் 3.66 ஹெக்டேர் தனியாருக்குச் சொந்தமான நிலமும் தனுஷ்கோடி ரயில்வே பாதைக்காக கையகப்படுத்தப்பட வேண்டும்.கடலோர சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்று கூறி கடந்த திமுக அரசு இந்த ரயில் பாதைக்கு ஆர்வம் காட்டவில்லை. தற்போதைய தவெக அரசு முழு ஒத்துழைப்பு வழங்கினால் விரைவில் ராமேஸ்வரம் தனுஷ்கோடி ரயில் பாதைக்கான பணிகள் துவங்கும்" என்றனர்.

## "பாரதிராஜா குழந்தை போல மனதில் பட்டதை வெளிப்படையாக பேசிவிடுவார்" ரஜினி உருக்கம்





சென்னை, ஜூன்.11-
"பாரதிராஜாவின் திறமை மற்றும் சாதனையைப் பற்றி அனைவருக்கும் தெரியும். தனிப்பட்ட முறையில் அவர் ஒரு குழந்தை மாதிரி. மனதுக்குள் தோன்றியதே வெளிப்படையாக சொல்லிவிடுவார்" என நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.கடந்த சில நாட்களாக கடும் உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த பாரதிராஜா, இன்று (ஜூன் 10) அதிகாலையில் காலமானார். இதையடுத்து, நடிகர் ரஜினிகாந்த், பாரதிராஜாவுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.
பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "பாரதிராஜாவின் திறமை மற்றும் சாதனையைப் பற்றி அனைவருக்கும் தெரியும். திரைத்துறைக்கு அதிகப்படியான நடிகர்கள், நடிகைகள், இயக்குநர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களை அறிமுகப்படுத்தி, அவர்களையும், திரையுலகையும் வாழ வைத்தவர். அதுமட்டுமல்லாமல் சினிமா துறையில் யாருக்கு எந்த பிரச்சினை வந்தாலும் முதலாவதாக குரல் கொடுத்து போராடியவர். இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் அவரது படைப்புகள் மறக்கப்பட மாட்டாது. அவருடைய பெயர் என்றென்றும் தமிழ் மக்களின் இதயத்தில் இருக்கும். தனிப்பட்ட முறையில் அவர் ஒரு குழந்தை மாதிரி. மனதுக்குள் தோன்றியதே வெளிப்படையாக சொல்லிவிடுவார். பிடித்தால் பிடித்திருக்கிறது; இல்லையென்றால் பிடிக்கவில்லை என கூறிவிடுவார். என்னைப் பற்றியும் அவர் நிறைய விமர்சனங்களை வைத்திருக்கிறார்.உன்னை எனக்கு பிடிக்கும்; உனது நடிப்பு எனக்கு பிடிக்காது என்பார். அவருடன் இருந்தாலே அவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். அவரைப்போல வெளிப்படையாக பேசக் கூடியவர்கள் யாரும் கிடையாது. அதனால்தான் எம்ஜிஆர், கருணாநிதி மற்றும் நடிகர் சிவாஜி ஆகியோருடன் நல்ல நட்பில் இருந்தவர்.
உயிருடன் இருக்கும் போதே அவரைப் பார்க்க வேண்டும் என நினைத்தேன்; அவர் குணமாகி விடுவார் அப்புறம் பார்க்கலாம் என கூறினார்கள். அவர் உயிருடன் இருக்கும்போது அவரை பார்க்க முடியாத சூழல் ஏற்பட்டு விட்டது. அவர் என்றென்றும் எனது நினைவில் என்னுடன் இருப்பார். அவருடைய ஆத்மா சாந்தமடையட்டும். அவருடைய குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்" என்று ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.



## தொடர்ந்து அதிக நாட்கள் பிரதமர் பதவியை வகித்து மோடி சாதனை

### அன்புமணி வாழ்த்து

சென்னை, ஜூன்.11-
இந்தியாவின் பிரதமர் பதவியை தொடர்ந்து 4399 நாள்கள் வகித்ததன் மூலம் இந்தியாவில் தொடர்ச்சியாக அதிக காலம் பதவி வகித்த பிரதமர் என்ற புதிய சாதனையை நரேந்திர மோடி படைத்திருக்கிறார். இதற்காக அவருக்கு அன்புமணி ராமதாஸ் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 1952ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் தேதி முதல் 1964ஆம் ஆண்டு மே 27ஆம் தேதி வரை தொடர்ந்து 4398 நாள்கள் பதவி வகித்தது தான் இதுவரை சாதனையாக இருந்தது. 2014 ஆம் ஆண்டு மே 26ஆம் தேதி தொடங்கி இன்று 4399 ஆம் நாளாக பிரதமர் பதவியில் தொடர்வதன் மூலம் மோடி அவர்கள் புதிய சாதனை படைத்துள்ளார்.
12 ஆண்டு ஆட்சிக் காலத்தில் 25 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்டது, உட்கட்டமைப்புகளையும், டிஜிட்டல் பொதுக் கட்டமைப்புகளையும் ஏற்படுத்தியது என பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் ஆட்சிக்கு பல அடையாளங்கள் உள்ளன. இந்தியாவை பசியும், வறுமையும் இல்லாத, அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவு பெற்ற வல்லரசாக மாற்றும் முயற்சியிலும் அவர் வெற்றி பெற்று சாதிக்க வேண்டும் என்று வாழ்த்துவதாக பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்

## அதிகரிக்கும் அரசியல் நெருக்கடி ராகுல் காந்தியுடன் அபிஷேக் பானர்ஜி சந்திப்பு





புதுடெல்லி, ஜூன்.11-
காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தியை, திரிணமூல் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அபிஷேக் பானர்ஜி சந்தித்துப் பேசினார். டெல்லியில் ராகுல் காந்தியின் எண் 10, ஜன்பத் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.இண்டியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டம் கடந்த 8ம் தேதி புதுடெல்லியில் நடைபெற்றது. இதில் திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி, பொதுச் செயலாளர் அபிஷேக் பானர்ஜி ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் உரையாற்றிய மம்தா பானர்ஜி, "பாஜகவை எதிர்கொள்வதில் கூட்டணிக் கட்சிகளிடையே கூடுதல் ஒருங்கிணைப்பும் ஒற்றுமையும் தேவை.
கூட்டணி கட்சிகள் தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து, பொது நலன் சார்ந்த விவகாரங்களில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இதையடுத்து, காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி நேற்று (ஜூன் 9) அவரது இல்லத்துக்குச் சென்று மம்தா பானர்ஜி சந்தித்துப் பேசினார். அப்போதும், கூட்டணியை மேலும் வலுப்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசித்தனர்.
இந்நிலையில், இன்று ராகுல் காந்தியை, அபிஷேக் பானர்ஜி சந்தித்துப் பேசியுள்ளார். நடந்து முடிந்த மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்ததை அடுத்து கட்சி பிளவுபட்டுள்ளது. திரிணமூல் காங்கிரஸ் சார்பில் 80 வேட்பாளர்கள் தேர்வான நிலையில், மம்தா பானர்ஜி சார்பில் நிறுத்தப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் வேட்பாளர் ஷோவந்தேப் சட்டோபாத்யாயவுக்கு எதிராக 58 எம்எல்ஏக்களின் ஆதரவுடன் ரிதப்ரதா பானர்ஜி வெற்றி பெற்றார். இது மம்தா பானர்ஜிக்கு பெருத்த பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.
அதோடு, மக்களவையில் திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு 28 எம்.பி.க்கள் உள்ள நிலையில் அவர்களில் சுமார் 20 பேர், பாஜக தலைமையிலான என்டிஏவில் இணைய விரும்புவதாகவும், மக்களவையில் தங்களை தனி அணியாக கருதுமாறும் சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு கடிதம் எழுதியுள்ளனர். இதனால், மேற்கு வங்க சட்டப்பேரவையில் மட்டுமல்லாது, நாடாளுமன்றத்திலும் மம்தா பானர்ஜிக்கு நெருக்கடி முற்றியுள்ளது. திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் சுஷ்மிதா தேவ், பாஜகவை சேர்ந்த அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மாவைச் சந்தித்துப் பேசியுள்ளார். மேலும், அவர் தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.தேர்தலுக்குப் பிறகு திரிணமூல் காங்கிரஸ் கட்சி தொடர் நெருக்கடிகளை சந்தித்து வருவதோடு, அபிஷேக் பானர்ஜி மீதான பல்வேறு வழக்குகளும் தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த பின்னணியில், அபிஷேக் பானர்ஜி ராகுல் காந்தியை சந்தித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

## ஜூன் 15 முதல் தமிழகத்தில் லாரி வாடகையை உயர்த்த முடிவு. அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கும் அபாயம்.!



நாமக்கல், ஜூன்.11-
டீசல் விலை மற்றும் சுங்கக் கட்டணம் கடுமையாக உயர்ந்துள்ளதன் காரணமாக தமிழகத்தில் லாரி வாடகை கட்டணங்களை உயர்த்த லாரி உரிமையாளர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது. நாமக்கலில் இன்று நடைபெற்ற தமிழ்நாடு மாநில லாரி உரிமையாளர்கள் செயற்குழுவில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது வரும் ஜூன் 15 முதல் தமிழகத்தில் லாரி வாடகை கட்டணங்களை 25% வரை உயர்த்த லாரி உரிமையாளர்கள் சங்கம் முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர், லாரி தொழிலின் ஒட்டுமொத்த செலவில் சுமார் 70% டீசலுக்கே செலவாகிறது என்று குறிப்பிட்டனர். சமீபத்திய எரிபொருள் விலை உயர்வால் தங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுவதாக தெரிவித்து உள்ளனர்.இது தவிர சுங்க சாவடி கட்டணங்கள் மற்றும் உதிரி பாகங்கள் (Spare parts), டயர் விலைகள் என பல்வேறு விலைஉயர்வை தாங்கள் தொடர்ந்து எதிர்கொண்டு வருவதால், லாரி வாடகை கட்டணங்களை உயர்த்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகி, கட்டண உயர்வுக்கு வழிவகுத்துள்ளதாக குறிப்பிட்டு உள்ளனர். தொடர்ச்சியான செலவினங்களால் லாரி உரிமையாளர்களுக்கு ஏற்படும் நிதி நெருக்கடியைச் சமாளிக்கவே இந்த விலை உயர்வு என்றும் குறிப்பிட்டு உள்ளனர். லாரி வாடகை உயர்வால் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கிடுகிடுவென உயரும் என்ற அச்சம் எழுந்துள்ளது

## தவெகவில் இணைந்த அதிமுக எம்எல்ஏக்கள் மூவரின் ராஜினாமா ஏற்புக்கு எதிராக வழக்கு



சென்னை, ஜூன்.11-
தவெகவில் இணைந்த அதிமுக முன்னாள் எம்எல்ஏக்களின் ராஜினாமா கடிதங்களை ஏற்று சபாநாயகர் பிறப்பித்த உத்தரவுகளை ரத்து செய்ய கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தின் 17வது சட்டமன்றத்துக்கு நடந்த தேர்தலில், 108 இடங்களைக் கைப்பற்றி, தவெக தனிப்பெரும் கட்சியாகவும், திமுக 59 இடங்களையும், அதிமுக 47 இடங்களையும் கைப்பற்றின. திமுக கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளின் ஆதரவுடன், தவெக ஆட்சியமைத்தது. கடந்த மே 13 ஆம் தேதி பெரும்பான்மை வாக்கெடுப்பின் போது, அதிமுகவை சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள், எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம் தலைமையில் 25 அதிமுக எம்.எல்.ஏ.க்கள், தவெகவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். அவர்களுக்கு எதிராக கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ் தகுதி நீக்க நடவடிக்கை எடுக்கக் கோரி, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சபாநாயகரிடம் மனு அளித்திருந்தார்.இந்த சூழ்நிலையில், மதுராந்தகம் எம்எல்ஏ மரகதம் குமாரவேல், பெருந்துறை எம்எல்ஏ ஜெயக்குமார், தாராபுரம் எம்எல்ஏ சத்தியபாமா ஆகியோர் தங்கள் எம்எல்ஏ. பதவிகளை ராஜினாமா செய்து விட்டு, தவெகவில் இணைந்தனர். அவர்களின் ராஜினாமா கடிதங்களை அன்றைய தினமே சபாநாயகர் ஏற்றுக் கொண்டார். இதுகுறித்த அறிவிப்பு அரசிதழிலும் வெளியிடப்பட்டது. தகுதி நீக்க நடவடிக்கை நிலுவையில் இருந்தபோது, மூன்று அதிமுக எம்எல்ஏக்களின் ராஜினாமா கடிதங்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட உத்தரவை ரத்து செய்யக் கோரி தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் அதன் தலைவர் எம்.எல்.ரவி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், தகுதி நீக்க கடிதம் மீதான நடவடிக்கைகள் நிலுவையில் உள்ள போது, அதனை தவிர்க்கும் வகையில் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்ததை ஏற்க முடியுமா? என்ற அரசியல் சாசன கேள்வி எழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தகுதி நீக்க நடவடிக்கை நிலுவையில் உள்ள போது, ராஜினாமா கடிதங்களை ஏற்றுக் கொண்டது, கட்சித் தாவல் தடை சட்டத்தையும், மக்கள் தீர்ப்பையும் நீர்த்துப் போகச் செய்யும் வகையில் உள்ளது. கட்சித்தாவல், ராஜினாமா காரணமாக அடுத்தடுத்து தேர்தல்கள் நடத்த வேண்டியுள்ளதால் அரசுக்கு கூடுதல் செலவு ஏற்படுகிறது எனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. மூன்று எம்.எல்.ஏ.க்களின் ராஜினாமாவை ஏற்று பிறப்பித்த சபாநாயகர் உத்தரவை ரத்து செய்ய வேண்டும். அவர்களை தகுதி நீக்கம் செய்யக் கோரிய மனுக்களை விசாரித்து, முடிவெடுக்க சபாநாயகருக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பேரறிவாளன் சட்டப்படி வழக்கறிஞராக பதிவு செய்ததில் என்ன தவறு? நீதிபதிகள் கேள்வி



சென்னை, ஜூன்.11-
'பேரறிவாளன் சட்டப்படி தன்னை வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டதில் என்ன தவறு உள்ளது? ' என உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு கேள்வி எழுப்பியுள்ளது.முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதாகி 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறை தண்டனையை அனுபவித்த பேரறிவாளன், கடந்த 2022ம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.இந்நிலையில் அவர் சட்டப்படிப்பு படித்து, கடந்த ஏப்.24 அன்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் தன்னை வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார்.இந்நிலையில், பேரறிவாளனை வழக்கறிஞராக பதிவு செய்ததை எதிர்த்து காங்கிரஸ் எம்பி ஆர்.சுதா, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அதில், பேரறிவாளன் கருணை அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளாரேயன்றி, குற்றவாளி இல்லை என கூறப்படவில்லை.மேலும், குற்ற வழக்குகளில் சிறை தண்டனையை அனுபவித்தவர்கள் விடுதலையான 2 ஆண்டுகளுக்குப் பிறகு வழக்கறிஞராக தங்களைப் பதிவுசெய்து கொள்ள அனுமதிக்கும் வழக்கறிஞர் சட்டப்பிரிவையும் சட்டவிரோதமானது என அறிவித்து அதை ரத்து செய்ய வேண்டும். பேரறிவாளனை வழக்கறிஞராகப் பதிவு செய்தது தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார்.இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.அப்போது நீதிபதிகள், குற்ற வழக்கில் சிறை தண்டனை அனுபவித்து விடுதலை ஆன 2 ஆண்டுகளுக்குப் பிறகு வழக்கறிஞராகப் பதிவு செய்து கொள்ளலாம் என வழக்கறிஞர்கள் சட்டம் அனுமதிக்கும்போது, பேரறிவாளன் தன்னை வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டதில் என்ன தவறு என கேள்வி எழுப்பினர். பின்னர் இந்த வழக்கில் சிபிஐ விசாரணை கோருவது ஏற்புடையதல்ல என்பதால், வழக்கில் இருந்து சிபிஐயை நீக்க மனுதாரருக்கு உத்தரவிட்டனர். அத்துடன் இந்த வழக்கில் அகில இந்திய பார் கவுன்சில் மற்றும் தமிழ்நாடு பார் கவுன்சில் உள்ளிட்டோர் பதிலளிக்க 4 வார காலம் அவகாசம் வழங்கி விசாரணையை தள்ளி வைத்துள்ளனர்.

## "திரைத் துறையை மண் வாசனையால் நிரப்பியவர் பாரதிராஜா" இபிஎஸ் புகழஞ்சலி





சென்னை, ஜூன்.11-
"என் இனிய தமிழ் மக்களே" என்ற அவரது குரல் சினிமா உள்ளவரை நிலைத்து நிற்கும் என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில்: "தென் தமிழகத்தின் கிராமத்தில் இருந்து புறப்பட்டு, தமிழ் சினிமாவின் கேமராவை கிராமங்களை நோக்கி திருப்பியவர்; திரைத் துறையை மண் வாசனையால் நிரப்பியவர்; தமிழ் சினிமாவை தமிழ் மண்ணுக்குரிய விழுமியங்களோடு உலகம் திரும்பிப் பார்க்கச் செய்தவர் பாரதிராஜா. அவர்தம் மறைவு என்பது ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். "என் இனிய தமிழ் மக்களே" என்ற அவரது குரல் சினிமா உள்ளவரை நிலைத்து நிற்கும். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், திரைத் துறையினருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த பாரதி ராஜாவின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்." என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார். கடந்த சில நாட்களாக கடும் உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த பாரதிராஜா, இன்று (ஜூன் 10) அதிகாலையில் காலமானார். அவரது மறைவுச் செய்தி திரையுலகினர், ரசிகர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. பலரும் தங்களது இரங்கலை தெரிவித்து வருகின்றனர்.

## பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட தவெகவினர் மீது நடவடிக்கை: இந்திய கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.11-
ஸ்ரீவைகுண்டத்தில் இளம்பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய ஆளும் கட்சி நிர்வாகிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஸ்ரீவைகுண்டம் இளம்பெண் கூட்டு பாலியல் வன்கொடுமையில் தவெக நிர்வாகிகள் ஈடுபட்டுள்ள நிகழ்வு தமிழகம் முழுவதும் அதிர்ச்சி அலையை உருவாக்கியுள்ளது.
காவல் துறையில் புகார் அளிக்கக் கூடாது என எம்எல்ஏ வி.ஜி.சரவணன் மிரட்டியதாக அப்பெண் குற்றம் சாட்டியுள்ளார். சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய நிவாரணமும், அரசு வேலையும், பாதுகாப்பும் வழங்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்

## திருமுடிவாக்கத்தில் பழைய பொருட்கள் குடோனில் பயங்கர தீ விபத்து

சென்னை, ஜூன்.11-
குன்றத்தூர் அருகே திருமுடிவாக்கத்தில் தொழிற்சாலை கழிவுகள் பிரிக்கும் குடோனில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த பழைய பொருளை சேகரித்து வைக்கும் குடோனை ராஜா என்பவர் நடத்தி வருகிறார். இதில் வடமாநிலத்தை சேர்ந்த 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணி புரிந்து வருகின்றனர்.
இந்நிலையில் இன்று மாலை திடீரென பழைய பொருளை சேகரித்து வைத்த குடோனில் தீ பிடித்து எரிய தொடங்கியது. இதனை கண்டதும் அங்கு இருந்த ஊழியர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தீ கட்டுக்கடங்காமல் குடோன் முழுவதும் எரிய தொடங்கியதை அடுத்து ஊழியர்கள் வெளியேறினார்கள். பிளாஸ்டிக் பொருட்கள், பிளாஸ்டிக் கவர், இரும்பு உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தீயில் எரிந்தது.
இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தாம்பரம் தீயணைப்பு வீரர்கள், தீயை அணைக்க கடந்த அரை மணி நேரத்திற்கு மேல் போராடி வருகின்றனர். இந்த தீ விபத்தால் அப்பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்து காணப்படுகிறது. மேலும் இந்த பகுதியில் தீயை அணைப்பதற்கு போதிய தண்ணீர் இல்லாததால் டேங்கர் லாரி மூலம் தண்ணீர்கள் கொண்டுவரப்பட்டு தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து கிடங்கில் அதிக பொருட்கள் இருப்பதால் யாராவது தீ வைத்ததால் தீ விபத்து ஏற்பட்டதா அல்லது இந்த கிடங்கில் பணிபுரியும் ஊழியர்கள் பொருட்களை எரிக்கும் போது தீ பரவியதா என்று திருமுடிவாக்கம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்

## முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு எதிரான ரூ.28 கோடி லஞ்ச வழக்கு முடித்து வைப்பு



சென்னை, ஜூன்.11-
தனியார் கட்டுமான நிறுவனத்திடம் லஞ்சம் பெற்றதாக, முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கை முடித்து வைத்துள்ளதாக நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை, அறிக்கை தாக்கல் செய்துள்ளது.கடந்த 2011 முதல் 2016 வரையிலான அதிமுக ஆட்சிக்காலத்தில், வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்த வைத்திலிங்கம், சென்னை பெருங்களத்தூர் ஸ்ரீராம் ப்ராப்பர்ட்டீஸ் அடுக்குமாடி கட்டிடத்துக்கு திட்ட அனுமதி அளிக்க ரூ.28 கோடி லஞ்சம் பெற்றதாக புகார் எழுந்தது.இதுதொடர்பாக அறப்போர் இயக்கம் சார்பில் 2022ம் ஆண்டு லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் அளிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு தாமதத்துக்குப் பிறகு, இந்த புகாரின் அடிப்படையில், 2024ம் ஆண்டு செப்டம்பரில் லஞ்ச ஒழிப்புத் துறை வழக்கு பதிவு செய்தது.சென்னை அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இந்த வழக்கில், வைத்திலிங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்பதால், வழக்கை முடித்து வைத்து லஞ்ச ஒழிப்புத் துறை சார்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.இந்த வழக்கு, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன்பு, ஜூன் 12ம் தேதி விசாரணைக்கு வரவுள்ளது. அன்று லஞ்ச ஒழிப்புத் துறை தாக்கல் செய்துள்ள அறிக்கை மீது நீதிபதி முடிவெடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவுடனான நட்பின் அடையாளமாக சத்ரபதி சிவாஜி மகராஜ் சிலை நிறுவ இஸ்ரேல் அரசு திட்டம்




மும்பை, ஜூன்.11-
இந்தியா இஸ்ரேல் இடையிலான நட்பின் அடையாளமாக இஸ்ரேலில் சத்ரபதி சிவாஜி மகாராஜின் பிரம்மாண்ட சிலையை நிறுவ அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.
இதுகுறித்து மும்பைக்கான இஸ்ரேல் துணைத் தூதர் யானிவ் ரெவாச் நேற்று கூறும்போது, ''சிவாஜி மகராஜ் இந்தியாவுக்கு எவ்வளவு முக்கியமானவர் என்பதை நாங்கள் அறிவோம். எனவே, இஸ்ரேலின் பெரிய நகரங்களில் ஒன்றில் சிவாஜி மகராஜ் சிலை நிறுவப்படும், இந்தத் திட்டம் இரு நாட்டு மக்களையும் நீண்டகால நோக்கில் ஒன்றிணைக்கும்.சிவாஜியின் வரலாற்றுப் பெருமைக்குத் தகுந்த வாறு வடிவமைப்பு மற்றும் வரலாற்றுச் சான்றுகளைப் பெற மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளோம். அவரும் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.மகாராஷ்டிராவுக்கும், இன்று இஸ்ரேலிய சமூகத்துக்குப் பெரும் பங்களிப்பை வழங்கி வரும் இந்திய யூத சமூகத்துக்கும் இடையே உள்ள வரலாற்றுத் தொடர்புகளின் அடையாளமாக இச்சிலை விளங்கும். இஸ்ரேல் மக்களிடையே சிவாஜி மகாராஜின் சாதனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த நட்புறவு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது'' என்றார்.இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துள்ள மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ், இத்திட்டத்துக்கு மாநில அரசு தனது முழு ஆதரவையும் வழங்கும் என்று எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்

## தங்கம் பவுனுக்கு ரூ.1040 உயர்ந்தது

சென்னை, ஜூன்.11-
தங்கம் விலை நேற்று திடீரென பவுனுக்கு ரூ.1040 உயர்ந்தது. தங்கம் விலை கடந்த சில மாதங்களாக ஏற்றம் இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தங்கம் விலை இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து குறைந்து வந்தது. இந்நிலையில் நேற்று தங்கம் விலையில் திடீர் மாற்றம் காணப்பட்டது. அதாவது, நேற்றைய தினம் தங்கம் விலை கிராமுக்கு ரூ.130 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,200க்கும், பவுனுக்கு ரூ.1,040 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 13,600க்கும் விற்றது. அதே நேரத்தில் வெள்ளி விலையில் நேற்று 4வது நாளாக மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.270க்கும், பார் வெள்ளி ரூ.2.70 லட்சத்துக்கும் விற்பனையானது. தங்கம் விலை திடீரென அதிகரித்து உள்ளது நகை வாங்குவோருக்கு சற்று அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

## மீனாட்சி அம்மன் கோயிலில் தரிசனத்துக்கு முறைகேடாக வசூல்



மதுரை, ஜூன்.11-
திருச்செந்தூர் முருகன் கோயில் போல், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலும் தரிசனத்துக்கு முறைகேடாக பணம் பெற்றுக் கொண்டு அனுப்புவதை தடுக்க இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திடீர் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்கள் எதிர்பார்க்கின்றனர். மதுரையில் உலகப் புகழ் பெற்ற மீனாட்சி அம்மன் கோயிலுக்கு தினமும் உள்ளூர், வெளியூர், வெளிநாடுகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். கோயிலுக்குள் பக்தர்கள் செல்போன் எடுத்துச் செல்ல அனுமதியில்லை. தரிசனத்துக்கு வரும் வெளிமாநில, வெளிமாவட்ட பக்தர்களிடம் சிலர் கட்டண தரிசன முறை கேட்டில் ஈடுபட்டு வருகின்றனர் என்று புகார் எழுந்துள்ளது. தவெக அரசு பொறுப்பேற்ற பிறகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ், மாநிலம் முழுவதும் உள்ள முக்கிய கோயில்களில் திடீர் ஆய்வு செய்து கட்டண தரிசன முறைகேடுகளை கண்டறிந்து நடவடிக்கை எடுத்து வருகிறார்.அதே போல, மீனாட்சி அம்மன் கோயிலிலும் ஆய்வு செய்து தடுக்க வேண்டும் என பக்தர்கள் எதிர்பார்க்கின்றனர். இதுகுறித்து பக்தர்கள் கூறுகையில், திருச்செந்தூர் போன்று மீனாட்சி அம்மன் கோயிலிலும் கட்டண தரிசனத்தில் பக்தர்களை அனுமதிப்பதில் முறைகேடுகள் நடக்கின்றன.கோயிலில் இடைத்தரகர்கள்சில மாதங்களுக்கு முன்பு பக்தர்களிடம் டிக்கெட்டுக்கு கட்டணம் பெற்ற ஊழியர் ஒருவர், டிக்கெட் வழங்காமல் அங்குள்ள மற்றொரு ஊழியருடன் சேர்ந்து கொண்டு முறைகேடாக பக்தர்களை தரிசனத்துக்கு அனுப்பினர். இதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோல, இடைத்தரகர்கள் சிலர், வெளிமாநில பக்தர்களிடம் தாங்கள் கோயில் ஊழியர்கள் எனக் கூறி ஏமாற்றுகின்றனர். கோயிலில் கூட்டமாக இருப்பதால், பணம் கொடுத்தால் விரைந்து தரிசனம் செய்யலாம் எனக் கூறி பல ஆயிரம் ரூபாய் வசூலித்து முறைகேடு செய்கின்றனர்.இதை கோயில் ஊழியர்கள், போலீஸார் தடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலும் ஆய்வு செய்து இங்கு நடந்து வரும் முறைகேடுகளை தடுக்க வேண்டும் என்றனர்.இதுகுறித்து கோயில் நிர்வாகத் தரப்பில் கூறுகையில், கோயிலில் முறைகேடுகள் நடக்க வாய்ப்பில்லை. தரிசனத்துக்கு அம்மன் சந்நிதி ரூ.50, இரு சந்நிதிகளுக்கு ரூ.100 மட்டும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கூடுதலாக யாராவது கேட்டால் புகார் அளிக்கலாம், என்று கூறினர்.



## தவெக மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்துடன் நெல்லை மாவட்ட செயலாளர் ராஜகோபால் ஆலோசனை!

திருநெல்வேலி, ஜூன்.11-
திருநெல்வேலி தெற்கு மாவட்ட தமிழக வெற்றிக்கழகத்தின் சார்பில், கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அவர்களைச் சென்னையில் நேரில் சந்தித்து முக்கிய ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நெல்லை தெற்கு மாவட்டத் தவெக செயலாளர் ராஜகோபால் தலைமையில் சென்ற கட்சியின் முக்கிய நிர்வாகிகள், தவெக மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அவர்களைச் சென்னையில் நேரில் சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பின் போது நெல்லை தெற்கு மாவட்டக் கட்சியின் கட்டமைப்பு, புதிய நிர்வாகிகள் நியமனம் மற்றும் அடுத்தகட்ட மக்கள் நலப் பணிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.இந்நிகழ்வின் போது திருநெல்வேலி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த திசையன்விளை பேரூர் கழகச் செயலாளர் கில்லி ராஜா உடனிருந்தார்.

## சாத்தான்குளம் வட்டார பட்டதாரி இளைஞர்களே அப்ளை பண்ணுங்க!வேளாண், தோட்டக்கலைத் துறையில் தற்காலிக வேலைவாய்ப்பு!

சாத்தான்குளம், ஜூன்.11-
தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் வட்டாரத்தில் 2026ஆம் ஆண்டு èGroupKப் பருவத்தில் மின்னணு பயிர் கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்வதற்காகத் தகுதியான இளைஞ ர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாகச் சாத்தான்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சுஜாதா தெரிவித்துள்ளார். சாத்தான்குளம் வட்டாரத்தில் உள்ள 20 வருவாய் கிராமங்களில் உள்ள வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறைப் பயிர்களைச் சர்வே எண் மற்றும் உட்பிரிவு வாரியாக மின்னணு முறையில் செல்போன் செயலி மூலம் கணக்கெடுப்பு செய்யத் தற்காலிகப் பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இத்தற்காலிகப் பணிக்கு டிப்ளமோ அல்லது ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (Degree) படித்து, ஆண்ட்ராய்டு செல்போன் பயன்படுத்தத் தெரிந்த சாத்தான்குளம் வட்டாரத்தைச் சேர்ந்த இளைஞர்கள் (பெண்கள் மற்றும் ஆண்கள்) விண்ணப்பிக்கலாம். இப்பணிக்கான ஊக்கத்தொகையாக, தரிசு நிலத்தைக் கணக்கெடுப்பு செய்வதற்கு ஒரு உட்பிரிவுக்கு ரூ.3/ வீதமும், ஒரு பயிர் உள்ள நிலத்தைக் கணக்கெடுப்பு செய்வதற்கு ஒரு உட்பிரிவுக்கு ரூ.5/ வீதமும், ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு பயிர்கள் உள்ள நிலத்தைக் கணக்கெடுப்பு செய்வதற்கு ஒரு உட்பிரிவுக்கு ரூ.7/ வீதமும் கணக்கிடப்பட்டு, நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களின் வங்கித் கணக்கில் வரவு வைக்கப்படும். விருப்பமுள்ள தகுதியான இளைஞர்கள் சாத்தான்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அல்லது 7904264058 என்ற கைபேசி எண்ணையோ தொடர்பு கொண்டு தங்களது விருப்பத்தைத் தெரிவிக்கலாம் என அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

## மது போதைக்கு முற்றுப்புள்ளி வைக்க வலையபட்டி மலை இயற்கைச் சூழலில் 10 நாட்கள் மெகா மறுவாழ்வு முகாம்!

வலையபட்டி, ஜூன்.11-
மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள வலையபட்டி கிராமத்தின் மலைப்பகுதியில் அமைந்துள்ள குளோரி ஓசா டெல் இயற்கைச் சூழலில், மதுரை கிராமப்புற மண்டலம் மற்றும் சுகம், களஞ்சியம் அறக்கட்டளைகளின் சார்பில் பிரம்மாண்ட மது போதை மறுவாழ்வு சிகிச்சை முகாம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றுள்ளது.
மதுரை கிராமப்புற மண்டல ஒருங்கிணைப்பாளர் ஐயப்பன் வழிகாட்டுதலுடன், மண்டலச் சுகாதார ஒருங்கிணைப்பாளர் முத்தையா, தானம் மக்கள் கல்வி நிலையப் பயிற்சியாளர் பாலுச்சாமி மற்றும் திண்டுக்கல் மண்டலச் சுகாதார ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீராம் ஆகியோர் இம்முகாமை ஒருங்கிணைத்து நடத்தினர். களஞ்சிய குடும்ப உறுப்பினர்களிடையே நேரில் பேசி, குடிநோய்க்கு அடிமையானவர்களைக் கண்டறிந்து, அவர்களின் விருப்பத்தின் பேரில் இந்த 10 நாட்கள் தங்கிப் பயிலும் சிறப்பு முகாமிற்கு அழைத்து வரப்பட்டனர். முகாமில் பங்கேற்றவர்களுக்கு மதுரை சுகம் மருத்துவமனையின் இசிஜி, எக்ஸ்ரே, ஸ்கேன் மற்றும் லேப் டெஸ்ட்கள் மூலம் கல்லீரல், நுரையீரல், கணையம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் மஞ்சள் காமாலை போன்றவை கண்டறியப்பட்டு, மருத்துவர் சுகபரணிதரன் மூலம் தீவிர மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இவர்களோடு சித்த மருத்துவர் சண்முகப்பிரியா, சிவானந்தன் மற்றும் பொதுச் சுகாதாரம் பயின்ற வல்லுநர்கள் கலந்துகொண்டு தனிநபர் மற்றும் குடும்ப ஆலோசனைகளை வழங்கினர். தொடர்ந்து மதுப்பழக்கமின்றி வாழ்வதை உறுதி செய்ய ராமகிருஷ்ணன் மூலம் 'ஆல்கஹாலிக் அனானிமஸ்' (AA) குழுவிலும் இணைக்கப்பட்டுள்ளனர்.

## சென்னையில் இருந்து கொல்கத்தா, பெங்களூரு, புனே செல்லும் விமானங்கள் தாமதம்: விடிய விடிய காத்திருந்த பயணிகள்




சென்னை, ஜூன்.11-
சென்னையில் இருந்து கொல்கத்தாவுக்கு நேற்று முன்தினம் இரவு 7.40 மணிக்கு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் பயணிகள் விமானம் புறப்பட வேண்டும். அந்த விமானத்தில் பயணம் செய்ய 148 பயணிகள் காத்திருந்தனர்.அப்போது, விமானம் காலதாமதமாக புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான காரணத்தை விமான நிறுவனம் தெரிவிக்கவில்லை. விடிய விடிய விமான நிலையத்திலேயே பயணிகள் காத்திருந்தனர்.30க்கும் மேற்பட்ட பயணிகள் தங்கள் பயணத்தை ரத்து செய்துவிட்டு, வீடுகளுக்கு சென்றனர். பின்னர், விமானம் 8 மணி நேரம் தாமதமாக நேற்று அதிகாலை 4 மணிக்கு கொல்கத்தா புறப்பட்டு சென்றது.அதேபோல், சென்னையில் இருந்து நேற்று முன்தினம் இரவு 9.25 மணிக்கு 120 பயணிகளுடன் பெங்களூருக்கு புறப்பட வேண்டிய ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் இரவு 11 மணிக்கு புறப்பட்டது.
சென்னையில் இருந்து நேற்று முன் தினம் இரவு 10.05 மணிக்கு 167 பயணிகளுடன் புனே புறப்பட வேண்டிய ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் நள்ளிரவு 12 மணிக்கு புறப்பட்டு சென்றது.ஒரே நாள் இரவில் அடுத்தடுத்து 3 ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானங்கள் தாமதம் ஆனதால், நூற்றுக்கணக்கான பயணிகள் அவதிக்குள்ளாகினர்.அவர்கள் அதிகாரிகளுடன் வாக்குவாதங்களில் ஈடுபட்டனர். இதுகுறித்து, சென்னை விமான நிலைய அதிகாரிகள் கூறுகையில், "சென்னைக்கு வரவேண்டிய விமானங்கள் தாமதமாக வந்ததால், இங்கிருந்து புறப்பட வேண்டிய விமானங்களும் தாமதமாக புறப்பட்டன" என்று தெரிவித்தனர்.

## தென்காசி மாவட்டத்திற்கு மழை பெய்ய வாய்ப்பு : முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் தகவல்

தென்காசி, ஜூன்.11-
தென்காசி மாவட்டத்திற்கு 10.06.2026 - 13.00 மணி வரையில் இடியுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் மூலம் முன் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக தென்காசி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய அருவி பகுதிகள் மற்றும் வனப்பகுதிகளில் மிதமான மழை பெய்து அதன் மூலம் அனைத்து அருவிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. எனவே தென்மேற்கு பருவமழையின் தீவிரம் காரணமாக நீர்நிலைகள் மற்றும் தாழ்வான பகுதிகளின் அருகில்




வசிக்கும் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பாக இருக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
தென்மேற்கு பருவமழை காலங்களில், பொது மக்கள் நீர்நிலைகள் மற்றும் ஆற்றில் குளிக்கச் செல்வதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.தென்காசி மாவட்டத்திலுள்ள இராமநதி, கடனாநதி, குண்டாறு, அடவிநயினார் மற்றும் கருப்பாநதி அணைகளில் உள்ள நீர்நிலைகள் மற்றும் அணைகட்டு பகுதிகளுக்கு பொது மக்கள் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் இடி மின்னலுடன் கனமழை பெய்யும் போது திறந்த வெளியில் நிற்பதையும், மரங்கள் மற்றும் உலோக கட்டமைப்புகளின் கீழ் நிற்பதையும் முற்றிலும் தவிர்க்க வேண்டும். மழை / வெள்ளநீர் தேங்கும் இடங்களில் கால்நடைகளை கட்டிவைக்க கூடாது. வெள்ள பெருக்கு ஏற்படுவதற்கு முன்னர் கால்நடைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். வெள்ளப்பெருக்கு ஏற்படும் சமயங்களில் தாழ்வான பகுதிகளிலும், நீர்நிலைகளின் இரு கரைகளிலும் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும்.பொதுமக்கள் தங்களது ஆதார் / குடும்ப அட்டை உள்ளிட்ட முக்கியமான ஆவணங்களை நெகிழி உறைகளில் வைத்து பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.பேரிடர் காலங்களில், பொது மக்கள் டார்ச்லைட், மருந்துகள் போன்ற அத்தியாவசிய பொருட்களை வைத்திருக்க வேண்டியது அவசியம் ஆகும். தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், பேரிடர் கால நடவடிக்கைகள் மேற்கொள்ள, 24 மணி நேரமும் செயல்படும் வகையில் அவசர கால கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. பொது மக்கள் கட்டணமில்லா தொலைபேசி எண் 1077. 04633 - 290548 ஆகிய தொலைப்பேசி எண்களை தொடர்பு கொண்டு மழை, வெள்ளம் மற்றும் பேரிடர்கள் குறித்து தகவல் தெரிவிக்கலாம். பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் சம்பந்தப்பட்ட துறைக்கு தெரிவிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

## சென்னை டிஆர்ஐ அலுவலக காவலாளியை கட்டிப்போட்டு கார் கண்ணாடியை உடைத்து ஆவணங்கள் கொள்ளை

சென்னை, ஜூன்.11-
சென்னை டிஆர்ஐ அலுவலகத்தில் நள்ளிரவில் காவலாளியைக் கட்டிப்போட்டு கார் கண்ணாடியை உடைத்து ஆவணங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இந்த விவகாரத்தில் கூலிப்படையைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர்.தி.நகர், ஜி.என் .செட்டி சாலையில் வருவாய் புலனாய்வு இயக்குநரகம் (டிஆர்ஐ) இயங்குகிறது. தங்கம் கடத்தல் தொடர்புடைய 2 பேர் சமீபத்தில் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் ஒன்று இந்த அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது.இந்த கடத்தல் வழக்கில் சர்வதேச கடத்தல் கும்பலின் தொடர்பு உள்ளதா என தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. மேலும் இந்த வழக்கில் முக்கிய நபர்களும் சிக்கி இருந்தனர். பறிமுதல் செய்யப்பட்ட காரில் முக்கிய ஆவணங்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது. இதை சம்பந்தப்பட்ட கடத்தல் கும்பல் கொள்ளையடிக்க திட்டமிட்டது.அதன்படி, கேரளாவைச் சேர்ந்த கூலிப்படையினர் கடந்த 31ம் தேதி நள்ளிரவு தி.நகரில் உள்ள டிஆர்ஐ அலுவலக வளாகத்துக்குள் முகமூடி அணிந்து நுழைந்தனர். அவர்கள் காவலாளியான ஜான்கென்னடியை தாக்கி, வாயில் துணியைத் திணித்து, கை கால்களை கட்டினர்.பின்னர் கூலிப்படை காரின் கண்ணாடியை உடைத்து அதிலிருந்த ஆவணைங்களை கொள்ளையடித்து விட்டு தப்பியது. மறுநாள் காலை அலுவலகம் வந்த பணியாளர்கள் இதுகுறித்து தேனாம்பேட்டை போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீஸார் விரைந்து வந்து காவலாளியை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர்.இந்த கொள்ளை தொடர்பாக தேனாம்பேட்டை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல் கட்டமாக டிஆர்ஐ அலுவலகம் மற்றும் அதைச் சுற்றியுள்ள சிசிடிவி கேமரா பதிவுகள் கைப்பற்றப்பட்டன.இதில் கூலிப்படையைச் சேர்ந்த புதுச்சேரி காரைக்காலில் வசிக்கும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் வேலை செய்யும் அப்துல் ஹாடி (24), கேரளாவைச் சேர்ந்த ஜிம் மாஸ்டர்கள் அனூப் (33), ஆதித்யன் (20), சிம்லால் (53) ஆகிய 4 பேர் கொள்ளையில் ஈடுபட்டது தெரிந்தது.தலைமறைவாக இருந்த இந்த 4 பேரையும் போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதில் தொடர்புடைய மேலும் சிலரையும் கூலிப்படையை ஏவி விட்டவர்களையும் தனிப்படை போலீஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

## "நாங்கள்தான் உண்மையான திரிணமூல் காங்." மேற்கு வங்க சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ரிதப்ரதா பானர்ஜி

கொல்கத்தா, ஜூன்.11-
தாங்களே உண்மையான திரிணமூல் காங்கிரஸ் என்றும், தங்கள் அணியின் பலம் 58ல் இருந்து 64 ஆக உயர்ந்துள்ளதாகவும் மேற்கு வங்க சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ரிதப்ரதா பானர்ஜி தெரிவித்துள்ளார். நடந்து முடிந்த மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சி மொத்தமுள்ள 294 தொகுதிகளில், 80 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. மம்தா பானர்ஜியும் தான் போட்டியிட்ட தொகுதியில் தோல்வியை தழுவினார். தேர்தல் தோல்விக்குப் பிறகு திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட உட்கட்சிப் பூசல் காரணமாக, எம்எல்ஏக்களில் ஒரு பிரிவினர் கட்சியின் பொதுச் செயலாளர் அபிஷேக் பானர்ஜிக்கு எதிராக செயல்படத் தொடங்கினர். இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு, திரிணமூல் காங்கிரசின் மூத்த தலைவர்களில் ஒருவரான சொவன்தேப் சட்டோபாத்யாயை மம்தா பானர்ஜி அறிவித்தார். இதையடுத்து, எதிர் தரப்பினர் ரிதப்ரதா பானர்ஜியை முன்னிறுத்தினர். மொத்தமுள்ள 80 திரிணமூல் காங்கிரஸ் எம்எல்ஏக்களில் 58 பேர், ரிதப்ரதா



பானர்ஜிக்கு ஆதரவு தெரிவிக்கும் கடிதத்தில் கையெழுத்திட்டனர்.
அந்தக் கடிதம் சபாநாயகர் ரதிந்திர போஸ் வசம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து, ரிதப்ரதா பானர்ஜி எதிர்க்கட்சித் தலைவராக முறைப்படி அறிவிக்கப்பட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரிதப்ரதா பானர்ஜி, "மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் எங்கள் பக்கம் உள்ளனர். சபாநாயகர் எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளார். தற்போது நாங்கள் இன்னும் ஒரு படி மேலே செல்ல விரும்புகிறோம். திரிணமூல் காங்கிரஸின் சட்டமன்றக் குழுவுக்கு தலைமை ஆலோசகராக இருந்து மம்தா பானர்ஜி எங்களுக்கு வழிகாட்ட வேண்டும்" என தெரிவித்திருந்தார்.
இந்நிலையில், இன்று செய்தியாளர்களிடம் பேசிய ரிதப்ரதா பானர்ஜி, "எங்கள் அணியின் பலம் 58ல் இருந்து 64 ஆக உயர்ந்துள்ளது. கட்சியின் பெரும்பாலான எம்எல்ஏக்களின் ஆதரவும், எம்பிக்களின் ஆதரவும் எங்கள் அணிக்கு உள்ளது. நாங்களே உண்மையான திரிணமூல் காங்கிரஸ். நாங்கள் காங்கிரஸ் கட்சியுடன் இணையப் போவதாக வெளிவரும் தகவல்கள் உண்மையல்ல. பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியுடன் இணையவில்லை. பெரும்பாலான எம்பிக்களும் காங்கிரஸ் கட்சியுடன் இணையவில்லை. அப்படி இருக்க, இணைப்பு என்ற கேள்விக்கே இடமில்லை. மக்களவையில் உள்ள அதிருப்தி எம்பிக்கள் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு தொடர்ந்து ஆதரவளிப்பார்கள். டெல்லியில் யார் யாரை சந்திக்கிறார்கள் என்பது அவர்களின் விஷயம். அது எங்களுக்கு முக்கியமல்ல" என தெரிவித்துள்ளார்.
டெல்லயில் கடந்த 8ம் தேதி நடைபெற்ற இண்டியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டத்தில் மம்தா பானர்ஜியும் அபிஷேக் பானர்ஜியும் கலந்து கொண்டனர். இதையடுத்து, மம்தா பானர்ஜி, நேற்று சோனியா காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இதன் தொடர்ச்சியாக, அபிஷேக் பானர்ஜி இன்று ராகுல் காந்தியைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.



## 7 மாற்றுத்திறனாளிகள் உட்பட டாஸ்மாக் பணியாளர்கள் 200 பேருக்கு பதவி உயர்வு

சென்னை, ஜூன்.11-
தமிழகத்தில் கடந்த 2017ம் ஆண்டு நீதிமன்ற உத்தரவுப்படி தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள மூன்றாயிரம் டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டன.அந்த கடைகளில் பணியாற்றியவர்களை அனைத்து மாவட்ட மற்றும் மண்டலங்களில் உள்ள நிர்வாக அலுவலகங்களில் பணியமர்த்த முடிவு செய்யப்பட்டது. அதற்காக கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பை குறைத்து சிறப்புத் தேர்வு நடத்தி அதில் தேர்ச்சி பெறுவோருக்கு பணி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.மூடப்பட்ட கடை பணியாளர்கள் 500 பேருக்கு இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது. இந்நிலையில் இளைநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு 5 ஆண்டுகளில் பதவி உயர்வு வழங்க வேண்டும்.அதன்படி, நேற்று 200 இளைநிலை உதவியாளர்களுக்கு உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மேலும், டாஸ்மாக் சில்லறை விற்பனை கடைகளில் பணியாற்றும் மாற்றுத் திறனாளிகள் 7 பேருக்கு இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.இதனிடையே, புதிய அரசு அமைந்தபிறகு 717 மதுபான கடைகள் மூடப்பட்டுள்ளன. இந்தக் கடைகளில் பணியாற்றியவர்களை, தற்போது உருவாகியுள்ள 200 இளநிலை உதவியாளர்கள் காலிப்பணியிடங்களில் பணியமர்த்த வேண்டும் என டாஸ்மாக் பணியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்

## "பாரதிராஜா ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன்" இளையராஜா

சென்னை, ஜூன்.11-
"பாரதிராஜாவின் ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன். உங்களோடு இருக்கும் உறவுதான் அவருடனும் இருக்கிறது. இரண்டும் வேறு வேறு இல்லை" என இசைஞானி இளையராஜா தெரிவித்துள்ளார்.
திரையுலகின் தவிர்க்க முடியாத ஆளுமை, 'இயக்குநர் இமயம்' பாரதிராஜா , வயது முதிர்வு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக கடந்த சில மாதங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், இன்று அதிகாலை காலமானார். அவரது மறைவு ஒட்டுமொத்த திரையுலகையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.இதனையடுத்து, தனது வாழ்நாள் நண்பரும், கலைப்பயணத்தில் மிக நெருக்கமானவருமான பாரதிராஜாவின் உடலுக்கு, இசைஞானி இளையராஜா நேரில் சென்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்.
இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "பேச ஒன்றும் இல்லை. பாரதிராஜாவின் ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன் என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். உங்களோடு இருக்கும் உறவுதான் அவருடனும் இருக்கிறது. இரண்டும் வேறு வேறு இல்லை. நாட்டையும், நாட்டு மக்களையும், கலைஞர்களையும் நேசிப்பதுதான் என்னுடைய பிறப்பு. அதைத் தவிர ஒன்றும் இல்லை. " என்று அவர் தெரிவித்துள்ளார்




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000